

கன்னியாகுமரி மாவட்டத்தின் 2016-17-ஆம் ஆண்டிற்கான வருடாந்திர வங்கி கடன் திட்ட அறிக்கையை
மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், இன்று (01.06.2016) மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் வெளியிட்டார்.

செ.வெ.எண்-323 நாள்-01.06.2016

**கன்னியாகுமரி மாவட்டத்தில் 2016-17 நிதி ஆண்டில் ரூ.5475 கோடி வங்கிக் கடன் வழங்க இலக்கு**

கன்னியாகுமரி மாவட்ட வங்கியாளர் கலந்தாய்வுக் கூட்டத்தில், மாவட்டத்தில் 2016-17 நிதி ஆண்டில் **ரூ.5475/-** கோடிக்கு வங்கிக் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்ட ஆலோசனைக் குழுவின் சிறப்புக்கூட்டம் ஆட்சியர் **திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான்** (கி.அ.V அவர்கள்) தலைமையில் **01.06.2016** அன்று நடைபெற்றது. இதில் கன்னியாகுமரி மாவட்டத்தின் **2016-17-ம்** ஆண்டுக்கான வருடாந்திர வங்கிக் கடன் திட்ட அறிக்கை வெளியிடப்பட்டது.

இதில் வேளாண்மை மற்றும் வேளாண்மை தொடர்பான தொழில்களுக்கு ரூ.**3954** கோடி, தொழில் துறைக்கு ரூ.**439** கோடி மற்றும் சேவைத் துறைக்கு ரூ.**1082** கோடி ஆக மொத்தம் ரூ.**5475** கோடி தொகை வங்கிக் கடனாக வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட ரூ. **370** கோடி கூடுதல் ஒதுக்கீடாகும்.

கூட்டத்தில், மாவட்ட முன்னோடி வங்கியான இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, நாகர்கோவில் மண்டலத்தின் முதுநிலை மண்டல மேலாளர் **திரு.எஸ் முருகன்**, பாரத ரிஸர்வ் வங்கியின் உதவிப் பொது மேலாளர் திரு.அ.ராம்குமார், நபார்டு வங்கியின் மாவட்ட வளர்ச்சி மேலாளர் **திரு.மார்ட்டின் பிரகாசம்**, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் **சு.விஸ்வநாதன்**, வங்கியாளர்கள், மற்றும் அரசு துறைகளைச் சார்ந்த அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

வெளியீடு:
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
நாகர்கோவில்

சு. விஸ்வநாதன்
LDM
KKDT.
9486276642